1994 ஏப்ரல் 8]

வினா எண் 228 மற்றும் 229, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 230, திரு. பி. வி. இராஜேந்திரன் இருக்கையில் இல்லை (குறுக்கீடு) அவருக்குப் பதிலாக அந்த ஊர்க்காரர் திரு. தம்புசாமி கேட்கிறார். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

230--

**வேதாரண்யம் பகுதியில் மல்லிகை பயிரிடுவோருக்கான வேளாண் இடுபொருட்கள் தட்டுப்பாடு.**

*22623-திரு. பி. வி. இராஜேந்திரன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) வேதாரண்யம் பகுதியில் அதிக அளவில் விளையும் மல்லிகை பயிரிடுவோர்களுக்கான வேளாண் இடுபொருட்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைக்காமல் விவசாயிகள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேதாரண்யம் பகுதியில் வேளாண் இடுபொருள்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் தட்டுப்பாடு குறித்து தோட்டக்கலைத் துறைக்கு முறையீடு எதுவும் வரப்பெறவில்லை.

(ஆ) எனவே, பதில் எழவில்லை.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் ஒன்றியம் முழுவதிலும் அதிகமாக பணப்பயிராக மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. அந்த மல்லிகை என்பது சென்னை வரையிலும் வியாபாரத்திற்காக வந்து கொண்டிருக்கிறது. அப்படி முக்கியமாகக் கருதிச் செய்யக்கூடிய அந்த மல்லிகைச் செடி அவ்வப்போது புதிய புதிய நோய்களால் தாக்கப்பட்டு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே விவசாயிகள் பாதிக்காமல் எப்போதும் விவசாயக் கிடங்குகளிலே பூச்சிக் கொல்லி மருந்து வைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை இடுபொருட்கள் வேளாண்மை கிளைக் கிடங்குகளிலே வைக்கப்படுகிறது. தங்களுடைய பயிருக்குத் தேவையான மருந்துகளை அவர்கள் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் சில மருந்துகள் பிரசித்தி பெற்றவை என்று விவசாயிகளால் கருதக்கூடிய மருந்துகளுக்கு மானியம் அரசாங்கத்தால் தரப்படுவது இல்லை. மானியம் இல்லாத மருந்துகள் வேளாண்மை கிடங்குகளில் வைக்கப்படுவது இல்லை. எனவே அரசு அங்கீகரித்துள்ள மானியமாக வழங்கக்கூடிய மருந்துகள் ஆண்டு முழுவதும் அந்தப் பகுதியிலே கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மல்லிகை உற்பத்தி வேதாரண்யத்தில் மட்டும் அல்லாமல் பல ஜில்லாக்களில், திண்டுக்கல், மதுரை போன்ற ஜில்லாக்களில் எல்லாம் அதிகப்படியான அளவு உற்பத்தியாகின்றது. இந்த மல்லிகைப் பூவிலிருந்து ஜாஸ்மின் என்ற ஒரு தைலம் தயாரித்தால் அந்தத் தைலம் மேலை நாடுகளிலே அதிகப்படியாக விற்பனையாவதாகவும் சொல்லுகிறார்கள். ஆகவே அதிகப்படியான மல்லிகை சாகுபடி செய்ய விவசாயத்திற்கு அதிகமாக அரசு உதவி செய்வதோடு, இங்கே ஒரு தொழிற்சாலையையும் அமைத்து அதன் மூலமாக அந்தத் தைலத்தை தயார் செய்வதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல பகுதிகளிலே மல்லிகைகளிலே பல வகைகள் பயிரிடப்பட்டு, அந்த மல்லிகைப் பூக்களையெல்லாம் மகளிர் தங்களுடைய கூந்தலிலே பெரும் அளவு வைக்கக்கூடிய அளவுக்குத் தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த மல்லிகை மலர்களிலேயிருந்து வாசனைத் திரவியம் எடுப்பதற்கு ஒரு காலத்திலே ஆய்வு செய்யப்பட்டு சில தனியார்கள் சில இடங்களிலே அத்தொழிற்சாலைகளை துவங்கினார்கள். அந்த வாசனை எண்ணெயை மேலைநாடுகளுக்கு விற்பனை செய்யக்கூடிய நேரத்திலே இன்றைக்கு செயற்கையான வாசனை எண்ணெய்கள் அதிக அளவில் வருவதன் காரணமாக அதற்குரிய விலை அதற்குக் கிடைக்கவில்லை என்ற கருத்தின் அடிப்படையிலே இது போன்ற தொழிற்சாலைகள் இன்றைக்கு நசிந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*1994 ஏப்ரல் 8*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு வி. கே. சின்னசாமி.

*முற்பகல் 10-30*

**திரு. வி. கே. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பெரியார் மாவட்டத்தில் பவானிசாகர் பகுதியில் அதிக அளவில் மல்லிகை, கனகாம்பரம் போன்ற பூக்கள் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். அங்கே வேளாண்மைத் துறையின் சார்பாக ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றவுடன், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரிலே புதிதான நெல் ரகத்தைக் கண்டுபிடித்தது போல மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரில் புதிய பூ ரகத்தை அதுவும் மல்லிகைப் பூ ரகத்திலே கண்டுபிடிப்பதற்கு ஆராய்ச்சிகள் எதுவும் நடத்தப்பட்டுள்ளதா? அப்படி ஏதாவது கண்டு பிடித்து விவசாயிகளுக்கு வழங்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தினுடைய தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திலே பணியாற்றக்கூடிய பேராசிரியர்கள், வல்லுநர்கள் புதிய அதிக மகசூல் தரக்கூடிய மல்லிகைகளையும், கனகாம்பரங்களையும் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் அந்த விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய குறை எல்லாம் தாங்கள் உற்பத்தி செய்யக் கூடிய அந்தப் பூக்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதுதான். எனவே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல இந்தப் பூக்கள் இன்றைக்கு தமிழகத்தினை பொறுத்தமட்டிலே பூஜைக்கும் பெண்களுடைய கூந்தலுக்கும் மட்டுமே பெரிய அளவிலே போய்க்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் எல்லாம் இதைத் தவறாமல் பூஜைக்கும் தங்களுடைய மகளிருக்கும் வாங்கித் தந்தால் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னசாமி, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக இதே வேலையாகத் திரிய வேண்டாம். *(சிரிப்பு)*

வினா எண் *231*, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.